**செய்தி வெளியீடு எண்:269** **நாள்: 14.05.2013**

# செய்தி வெளியீடு

தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தீயணைப்போர் பதவிக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களில், நன்னடத்தை குறித்த காவல்துறை விசாரணை மற்றும் மருத்துவ பரிசோதனை அடிப்படையிலான அறிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் இறுதியாக தகுதிப் பெற்ற 671 நபர்களுக்கு தீயணைப்போராக நியமனம் ஆணை தனியே அனுப்பி வைக்கப்படும். இந்நபர்களுக்கு 27.5.2013 முதல் கீழ்கண்ட நான்கு இடங்களில் 3 மாத கால அடிப்படை பயிற்சியளிக்கப்படவுள்ளது:–

(1) மாநிலப் பயிற்சி மையம், தாம்பரம், சென்னை– 600 047

(2) தற்காலிக பயிற்சி மையம்,
ராணிப்பேட்டை இன்ஸ்டியூஷன் ஆப் டெக்னாலஜி கட்டடம், வேலூர்

(3) தற்காலிக பயிற்சி மையம்,
காவல்துறை ஆயுதப்படை பிரிவு தற்காலிக கல்யாண மண்டபம்,
திருநெல்வேலி

(4) தற்காலிக பயிற்சி மையம்,
ஆற்காடு லுத்ரன் சர்ச் கட்டடம், கடலூர்

தகுதிப் பெற்ற நபர்களுக்கு பணி நியமனம் வழங்கிட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் மற்றும் பயிற்சிக்கு அறிக்கை செய்ய வேண்டிய பயிற்சி மைய விவரம் தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் வலை தளத்தில் www.tnfrs.tn.nic.in வெளியிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு சீருடைப்பணியாளர் தேர்வாணையத்தினால் தீயணைப்போர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நபர்கள் தங்களது பதிவு எண் மூலம் மேற்படி வலைதளத்தில் நியமனம் செய்யப்பட்டுள்ள நிலையத்தின் பெயர் மற்றும் பயிற்சி பெற அறிக்கை செய்து கொள்ள வேண்டிய பயிற்சி மைய விவரத்தினை தெரிந்து கொள்ளலாம்.

தீயணைப்பு–மீட்புப் பணிகள் துறை
தமிழ்நாடு

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை.9**